# பள்ளிக் கல்வித்துறை, பெரம்பலூர் மாவட்டம்

**முதல் இடைப்பருவத் தேர்வு - 2022**

**பத்தாம் வகுப்பு - மொழிப்பாடம் : தமிழ்**

**காலம்: 90 நிமிடங்கள்** **மொத்த மதிப்பெண்கள்: 50**

குறிப்புகள்: விடைகள் தெளிவாகவும் குறித்து அளவினதாகும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி – 1 தமிழ்த்துகள் 5x1=5

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினை சேர்த்து எழுதவும்.

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
   அ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும் ஆ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
   இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய மெய் எழுத்துகள் அளபெடுப்பது ----
   அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை
3. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல்நீர் ஒலித்தல் ஆ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் இ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
4. காலம் கரந்த பெயரெச்சமே ....... ஆகும்.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை
5. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது ..............
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ ) சிற்றூர்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** 4x1=4

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

6. இப்பாடல் அடிகள் இடம்பெறும் நூல் எது?
   அ) கனிச்சாறு ஆ) உலகியல் நூறு இ) பாவியக்கொத்து ஈ) தனிப்பாடல் திரட்டு
7. 'இன்னறும் பாப்பத்தே' என்ற தொடர் குறிப்பிடுவது.........
   அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) திருக்குறள் ஈ) பதினெண் கீழ்க்கணக்கு
8. இப்பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
9. இப்பாடலில் இடம்பெறும் இரட்டைக்காப்பியங்கள் யாவை?

பகுதி - 2 பிரிவு – 1

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8

(வினா எண் **14** –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)

10. வசன கவிதை என்றால் என்ன? தமிழ்த்துகள்
11. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
12. எழுது என்றான் என்பது விரைவு காரணமாக எழுது எழுது என்றான் என அடுக்குத்தொடர் ஆனது. சிரித்துப் பேசினாள் என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?
13. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
14. 'பல்லார் .....' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2. 4x2=8

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் உரிய வகையில் விடையளிக்கவும்.

15. விடைகளுக்கு ஏற்ற வினாத் தொடர் அமைத்து எழுதுக.

    அ) உவம உருபு மறைந்து வந்தால் அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்.

    ஆ) எழில்முதல்வன், புதிய உரைநடை என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி பரிசு பெற்றார்.
16. கலைச்சொற்கள் தருக. அ) Conversation. ஆ) Consonant.
17. அகராதியில் காண்க. அ) ஊண், ஊன்
18. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. மலை - மாலை
19. பழமொழிகளை நிறைவு செய்க.

    அ) உப்பிட்டவரை ...............................................

    ஆ) அளவுக்கு மிஞ்சினால் ...............................................

பகுதி - 3 4x3=12

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

(வினா எண் **22** –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)

20. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
21. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை மலைபடுகடாம் நூல் எவ்வாறு காட்டுகிறது?
22. 'சிறுதாம்பு.....' எனத் தொடங்கும் நப்பூதனாரின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
23. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க் குரிமை உடைத்திவ் வுலகு. - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
24. உவமையணியை எழுதி விளக்குக.

பகுதி – 4 1x5=5

25. உமது ஊருக்கு நூலக வசதி அமைத்துத் தருமாறு நூலக ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

மாநில அளவில் நடைபெற்ற '**மரம் இயற்கையின் வரம்**' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்றத் தோழனை வாழ்த்தி, வாழ்த்து மடல் எழுதுக.

பகுதி – 5

விரிவான விடையளிக்கவும். 1x8=8

www.tamilthugal.blogspot.com

26. '**சான்றோர் வளர்த்த தமிழ்**' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப் பகுதியைக் கொண்டு விவரிக்க.

***********